# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## அற்றோணித் தத்துவம்
## (திருத்தம்)

**(122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் 2019, நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, ஓகத்து மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *308 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2:** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் 'முதன்மைச் சட்டவாக்கம்' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவ கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, அற்றோணித் தத்துவம் என்ற பதத்தின் பொருளை நீடிப்பதாகும்.

**வாசகம் 3:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல்வாங்கலொன்றுடன் தொடர்புடைய அற்றோணித் தத்துவம் பதிவுசெய்யப்படுவதைக் கட்டாயப் படுத்துவதாகும்.

**வாசகம் 4:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, 3இ மற்றும் 3ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன், மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல்வாங்கலொன்றுடன் தொடர்புடைய அற்றோணித் தத்துவமொன்று பதிவுசெய்யப்படுவதற்கான புதிய நடவடிக்கைமுறையொன்றைக் குறித்துரைக்கின்றது.

**வாசகம் 5:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, அற்றோணித் தத்துவம் ஒன்றை இல்லாதாக்குவதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்கான புதிய நடவடிக்கைமுறையொன்றைக் குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 6:** இவ்வாசகம், 5 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மை யினதாகும்.

**வாசகம் 7:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, அற்றோணித் தத்துவமொன்று தொடர்பில் எவரேனும் ஆளினால் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு தகவல் மீதான அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கான பொறுப்பை, அற்றோணித் தத்துவமொன்றை அத்தாட்சிப்படுத்தும் ஆளொருவருக்கு வழங்குவதாகும்.

**வாசகம் 8:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணையைத் திருத்துவதுடன், அது 9 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 9:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கு புதிய அட்டவணை ஒன்றை உட்புகுத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, அற்றோணித் தத்துவக்காரரின் முறையான அடையாளத்துக்கான புதிய அட்டவணை ஒன்றை உள்ளடக்குவதாகும்.

**வாசகம் 10:** இப்பிரிவு, நிலைபெயர்கால ஏற்பாடுகளுக்கும், நீக்கப்பட்ட ஏற்பாடு குறித்தவொரு காலப் பகுதிக்கு ஏற்புடையற்பாலதாக இருப்பதற்கும் ஏற்பாடு செய்கின்றது.

## அற்றோணித் தத்துவம்
## (திருத்தம்)

ச.வ. - ஓ. 35/2016

### (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) ''அற்றோணித் தத்துவம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

'' ''அற்றோணித் தத்துவம்'' என்பது, சட்டத்தரணியொருவருக்கு வழங்கப்படும் தத்துவம் அல்லது அதிகாரம் தவிர, ஆளொருவரால் இன்னோராளுக்கு ஏதேனும் வேலையைப் புரிவதற்கு, ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு வழங்கப்பட்டதும், இரண்டு சாட்சிகளுக்கு முன்னிலையில் நிறைவேற்றப்பட்டதும் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரின், சமாதான நீதவானின், பதிவாளர்-தலைமையதிபதியின், எவரேனும் நீதிபதியின் அல்லது நீதிவானின் அல்லது 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றூதுப் பணிகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட தூதுவரின், உயர்ஸ்தானிகரின் அல்லது தூதாண்மை அலுவலரின் அல்லது காவற்றூதுவரின் முன்னிலையில் நிறைவேற்றப்

பட்டதும் அல்லது அவர்களினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதுமான ஏதேனும் எழுத்திலான தத்துவம் அல்லது அதிகாரத்தையும் அத்துடன் இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவமொன்றின் விடயத்தில், அந்த நாட்டின் சட்டத்திற்கிணங்க அத்தகைய அற்றோணித் தத்துவமொன்றை அத்தாட்சிப் படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆளொருவரையும் உள்ளடக்குதல் வேண்டும்;";

(2) "பதிவாளர்-தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" "பதிவாளர்-தலைமையதிபதி" என்பது, உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி அல்லது பிரதி அல்லது உதவி பதிவாளர் தலைமையதிபதி அத்துடன் பதிவாளர் தலைமையதிபதியின் அல்லது உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் அல்லது பிரதி அல்லது உதவி பதிவாளர் தலைமையதிபதியின் கடமைகளை அப்போதைக்கு சட்டமுறையாக நிறைவேற்றுகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்குதல் வேண்டும்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"அற்றோணித் தத்துவத்தைப் பதிவு செய்தல்.*

3. (1) தனது அற்றோணித் தத்துவத்தைப் பதிவுசெய்ய விரும்புகின்ற ஒவ்வோர் அற்றோணித் தத்துவக்காரரும், உண்மைப் பிரதியொன்றாக விருப்பதாக பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட அதன் பிரதியொன்றுடனும் அத்துடன் தனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உட்பட்டவரை அத்தகைய அற்றோணித் தத்துவமானது உண்மையானதென்றும் இன்னும் வலுவிலுள்ளதென்றும் அத்துடன் அற்றோணித் தத்துவத்தை அளிப்பவர் உயிருடனுள்ளார் என்றும் பயன்பட இதற்கான அட்டவணை II இல்

குறித்துரைக்கப்பட்டவாறாகச் செய்யப்பட்ட சத்தியக் கடதாசி ஒன்றுடன் சேர்த்தும், அவ்வற்றோணித் தத்துவம் இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின் ஒரு மாதத்தினுள்ளும், இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்டிருப்பின் மூன்று மாதங்களினுள்ளும் பதிவு செய்வதற்கென தனது அற்றோணித் தத்துவத்தைப் பதிவாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல் வாங்கலொன்றின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப் படுவதற்கென அளிக்கப்பட்டுள்ள அற்றோணித் தத்துவம் ஒவ்வொன்றும், விடயத்துக்கேற்ப, அத்தகைய காணி, பதிவு செய்யப்பட்டுள்ள எந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் அல்லது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழான உரித்து இடாப்பில் பதியப் பட்டுள்ளதோ அந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் அல்லது அத்தகைய உரித்து இடாப்பில், விடயத்துக்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதி மற்றும் இயைபான காணிப் பதிவகத்தின் பதிவாளர் ஆகியோரிடத்தில் அல்லது உரித்துப்பதிவாளரிடத் தில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட வழிமுறையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) பதிவாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் பிரதி சரியானதெனத் தன்னைத் திருப்திப்படுத்திய பின்னர், அற்றோணித் தத்துவத்தைப் பதிவுசெய்து அத்தகைய பிரதியைக் கோப்பிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவு, விடயத்துக்கேற்ப, எந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் அல்லது உரித்து இடாப்பில் பதியப்

பட்டுள்ளதோ அந்தத் தொகுதிக்கும் பக்கத்துக்குமான அல்லது உரித்து இடாப்புக்கான குறிப்பீடொன்றுடன் சேர்த்து, அதன் பதிவிலக்கத்தையும் திகதியையும் அத்தகைய பிரதியிலும் அற்றோணித் தத்துவத்திலும் புறக்குறிப்பிட்டு, அற்றோணித் தத்துவத்தைச் சமர்ப்பிக்கின்ற ஆளுக்கு அதனைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(3) அத்தகைய பதிவு இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகமொன்றில் பதியப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ, 3ஆ, 3இ மற்றும் 3ஈ ஆகிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, 3இ மற்றும் 3ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றின் நோக்கத்துக்காக வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் குறித்த சில தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்.

3அ. மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றின் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட ஒவ்வோர் அற்றோணித் தத்துவமும் -

(அ) இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருப்பின், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்துக்கமைய பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், கையாளப்படவுள்ள காணியின் எல்லைகளும் வரையறைகளும் மற்றும் விஸ்தீரணம் என்பன பற்றிய விவரணமொன்றையும் அத்துடன் கூட்டாட்சி ஆதனமொன்றின் விடயத்தில், கூறொன்று அடை

யாளங்காணப்பட முடியுமாகவுள்ளவிடத்து அக்கூறு மற்றும் வேறு ஆக்கக்கூறுகள் பற்றிய விவரணமொன்றையும், கூறொன்று அடையாளங்காணப்பட முடியாதுள்ள விடத்து முழுக்காணி பற்றியதுமான விவரணமொன்றையும், அத்துடன் கையாளப்படுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள காணி அல்லது கூட்டாட்சி ஆதனம் பதிவுசெய்யப்பட்டிருப்பின், அது எந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்தத் தொகுதியும் பக்கமும் பற்றிய குறிப்பீடொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப் பட்டிருப்பின், காணியின் எல்லைகளும் வரையறைகளும் மற்றும் விஸ்தீரணம் என்பன பற்றிய விவரணமொன்றையும் அத்துடன் கூட்டாட்சி ஆதனமொன்றின் விடயத்தில், கூறொன்று அடையாளங் காணப்பட முடியுமாகவுள்ளவிடத்து அக்கூறு மற்றும் வேறு ஆக்கக்கூறுகள் பற்றிய விவரணமொன்றையும், கூறொன்று அடையாளங்காணப்பட முடியாதுள்ள விடத்து முழுக்காணி பற்றியதுமான விவரணமொன்றையும், அத்துடன் கையாளப்படுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள காணி அல்லது கூட்டாட்சி ஆதனம் பதிவுசெய்யப்பட்டிருப்பின், அது எந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்தத் தொகுதியும் பக்கமும் பற்றிய குறிப்பீடொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) அளிப்பவரின் கையொப்பத்துக்கு மேலதிகமாக, அவரின் இடது அல்லது வலது கையின் பெருவிரல் அடையாளத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவரின் இரு பெருவிரலடையாளங்களும் இல்லாதுள்ள விடத்து, ஒன்றில் அவரின் இடது அல்லது வலது கையிலுள்ள வேறேதேனும் விரலடையாளத்தையும் அத்துடன் அவரின் இரு கைகளும் இல்லாதுள்ளவிடத்து அவர், பிரசித்த நொத்தாரிசு அல்லது அத்தகைய அற்றோணித் தத்துவத்தை அத்தாட்சிப் படுத்துகின்ற வேறு ஆளுக்கும் சாட்சிகளுக்கும் முன்னிலையில், அவரின் கால்பெரு விரலடையாளத்தை இடுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அளிப்பவரின் கடவுச்சீட்டின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதி யொன்றும் மற்றும் அத்தகைய கடவுச் சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டை கிடைக்கக்கூடியதாக விராதவிடத்து அவரின் 3.5 மிமீ × 4.5 மிமீ அளவிலான அண்மைக்காலப் புகைப்படமொன்றும், அத்துடன் அற்றோணித் தத்துவத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசினால் அல்லது இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் விடயத்தில், அத்தகைய அற்றோணித் தத்துவத்தை அத்தாட்சிப் படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசினால் அல்லது வேறு ஆளினால் சான்று படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் பிரதியொன்றும் அதனுடன் இணைக்கப் பட்டதாகவிருத்தல் வேண்டும்.

*நொத்தாரிசு அற்றோணித் தத்துவம் இல்லா தொழிக்கப் பட்டுள்ளதா அல்லது இல்லாதாக்கப் பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்தல்.*

3ஆ. அளிப்பவரால் கொடுக்கப்பட்ட அற்றோணித் தத்துவமொன்றின்மீது, மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பில் நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி உறுதியொன்றை அல்லது சாதனமொன்றை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும், விடயத்துக்கேற்ப, காணிப் பதிவகத்திலுள்ள இயைபான தொகுதிகளையும் பக்கங்களையும் அல்லது உரித்து இடாப்பையும் மற்றும் பதிவாளர் தலைமையதிபதி அலுவலகத்திலுள்ள பக்கங்களையும் பரிசோதித்து அற்றோணித் தத்துவமானது இல்லாதொழிக்கப்படவில்லையென தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அவரின் அத்தாட்சிப்படுத்துகையில் அத்தகைய நிகழ்வைக் குறிப்பிடுதலும் வேண்டும்:

அத்தகைய அற்றோணித் தத்துவம் இல்லா தொழிக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லாதாக்கப் பட்டுள்ளதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு, விடயத்துக்கேற்ப, காணிப் பதிவகத்திலுள்ள இயைபான தொகுதிகளையும் பக்கங்களையும் அல்லது உரித்து இடாப்பையும் மற்றும் பதிவாளர் தலைமையதிபதி அலுவலகத்திலுள்ள பக்கங்களையும் பரிசோதித்தல் அவருக்குப் போதுமானதாகவிருத்தல் வேண்டும்.

*நொத்தாரிசு அளிப்பவரினதும் அற்றோணித் தத்துவக் காரரினதும் கடவுச்சீட்டின்*

3இ. பிரிவு 3அ இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்று தொடர்பிலான உறுதி அல்லது சாதனமொன்றை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும், 3அ (ஈ) என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக

அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றையும் அற்றோணித் தத்துவத்தின் பிரதியொன்றையும் வைத்திருத்தல்.

அளிப்பவரினதும் அற்றோணித் தத்துவத்தின் அற்றோணித் தத்துவக்காரரினதும் கடவுச்சீட்டின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை அல்லது கடவுச்சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டை கிடைக்கக்கூடியதாக விராதவிடத்து அவர்களின் அண்மைக்காலப் புகைப்படமொன்றையும் மற்றும் அற்றோணித் தத்துவத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

அற்றோணித் தத்துவமொன்றின் செல்லுபடியாகும் காலப்பகுதி.

3ஈ. அற்றோணித் தத்துவமொன்று, அத்தகைய அற்றோணித் தத்துவத்தில் அதன் செல்லுபடியாகும் காலப்பகுதி குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய அற்றோணித் தத்துவம் இல்லாதொழிக்கப்படும் அல்லது இரத்துச்செய்யப்படும் வரை, அதன் அத்தாட்சிப்படுத்தற் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைப் பதிலீடு செய்தல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

"அற்றோணித் தத்துவம் ஒன்றை இரத்துச் செய்யும் அல்லது இல்லா தொழிக்கும் நடவடிக்கை முறை.

4. (1) அளிப்பவர், ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழிப்பதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு விரும்பினால் அல்லது அற்றோணித் தத்துவக்காரர் அத்தகைய அற்றோணித் தத்துவத்தின் கீழ் செயற்பட விரும்பாவிடின், அத்தகைய அளிப்பவர் அல்லது அற்றோணித் தத்துவக்காரர் விடயத்துக்கேற்ப, அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழிக்கின்ற அல்லது இல்லாதாக்குகின்ற அல்லது அவ்வற்றோணித் தத்துவத்தின் கீழ் அல்லது அதன்மீது தொழிற்படுவதில்லையென்ற அவரது உட்கருத்தை வெளிப்படுத்துகின்ற, நொத்தாரிசால் நிறைவேற்றப்படுகின்றதான ஆவணமொன்றை நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, அத்தகைய அளிப்பவர் அல்லது அற்றோணித் தத்துவக்காரர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணத்தை பதிவாளர் தலைமையதிபதிக்கும் மற்றும் அத்தகைய அற்றோணித் தத்துவமானது மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நோக்கெல்லைக்குள் வருகின்ற கொடுக்கல்வாங்க லொன்றின் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப் படுவதற்கென அளிக்கப்பட்டுள்ளவிடத்து பதிவாளர் தலைமையதிபதிக்கும் மற்றும் விடயத்துக்கேற்ப, இயைபான காணிப்பதிவகத்தின் பதிவாளர் அல்லது இயைபான உரித்துப் பதிவாளருக்கும் உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்; அவர், அத்தகைய அற்றோணித் தத்துவம், விடயத்துக்கேற்ப, எந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் அல்லது உரித்து இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் அல்லது உரித்து இடாப்பில் அதனைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணத்தின், நொத்தாரிசினால் சான்றுபடுத்தப் பட்டதான, சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று அல்லது உண்மைப் பிரதியொன்று இயைபான காணிப்பதிவகத்தில் அத்தகைய அற்றோணித் தத்துவம் எந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்தத் தொகுதியிலும் பக்கத்திலும் அல்லது இயைபான உரித்து இடாப்பில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை நீக்குதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் பிரிவு 11 என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"அற்றோணித் தத்துவம் பற்றிய தகவல்களின் அந்தரங்கத் தன்மையைப் பேணுவதற்கான கடமை.*

11. பிரசித்த நொத்தாரிசு அல்லது அற்றோணித் தத்துவமொன்றை நிறைவேற்றுகின்ற ஆளொருவர், அத்தகைய அற்றோணித்தத்துவம் தொடர்பில் எவரேனுமாளினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பிலான அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணையை இலக்கமிடல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையானது, அட்டவணை I என இத்தால் இலக்கமிடப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அட்டவணையை உட்புகுத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I என்றவாறாக இலக்கமிடப்பட்ட அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் அட்டவணை இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் அட்டவணை II என்பதாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"**அட்டவணை** II [பிரிவு 3]

................................... எனும் இடத்தைச் சேர்ந்த ......................... சமயத்தையுடைய .................................. ஆகிய நான் இத்தால் பின்வருமாறு சத்தியம் செய்கின்றேன்/வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன்.

(1) மேலுள்ள பெயரில் வாக்குமூலமளித்தவர்/உறுதிப்படுத்தியவர் நானாவேன்.

(2) இணைக்கப்பட்டுள்ள அற்றோணித் தத்துவமானது உண்மையான தும் இன்னும் வலுவிலுள்ளதுமாகும் என்பதுடன் அதனை அளித்தவர் உயிருடனுள்ளாரெனவும் நான் நம்புகின்றேன்.

...........................................

அற்றோணித் தத்துவக்காரர்.

| | |
|---|---|
| மேற்போந்த சத்தியக்கடதாசி மேலே பெயர்குறிப்பிடப்பட்டவருக்கு வாசித்துக்காட்டப்பட்டு விளக்கப்படுத்தப்பட்டதுடன், அவர் அதன் உள்ளீடுகளைப் புரிந்துகொண்டு .......... ஆம் நாளாகிய இன்று ................. இல் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியுள்ளார்/ சத்தியஞ்செய்துள்ளார். | எனது முன்னிலையில் சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்.”. |

நிலைபெயர்கால ஏற்பாடுகள்.

**10.** இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அப்பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவமொன்று தொடர்பில் பயனுறுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.